**Starting time 11.30 A.M.**

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

**O.S. No. 171/2018**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court, on 05.12.2023 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : பெருமாள் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling: | | Age | : |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி: தற்போது என்னிடம் காட்டப்படும் 03.03.2020 தேதியிட்ட கையொப்பம் என்னுடையதுதானா என்றால், ஆமாம். பஞ்சாயத்தில் பேசி எழுதப்பட்ட ஆவணம் என்றால், ஆமாம். தாவா பொதுக்கிணற்றிலிருந்து சர்வ எண். 200/5 பி-ல் உள்ள பிரதிவாதியின் ஒரு ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் எடுத்துச் செல்லாம் என்று பேசி எழுதப்பட்ட ஆவணம் என்றால், ஆமாம். ஆனால் அதன் படி யாரும் நடக்கவில்லை. 1998-ல் நாங்கள் இருவரும் சொத்தை கிரயம் பெற்ற போது பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுத்துச் செல்லலாம் என்று முடிவு செய்ததன்படி தான் தண்ணீர் எடுத்து வருகிறோம் என்றால், சரியல்ல. எனக்கு தெரியாமல் தண்ணீர் எடுத்துச் செல்கிறார்கள்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் சம்மந்த பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால், சரியல்ல. அதில் நான் கையெழுத்து போடவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் பத்திரம் பஞ்சயத்தார் முன்னிலையில், நானும், பிரதிவாதியும் பேசி எழுதிக்கொண்ட பத்திரம் என்றால், ஆமாம். சர்வே எண். 206/4 சி-உள்ள பொதுக்கிணற்றிலிருந்து 1-ம் பிரதிவாதி சர்வே எண். 207/5 பி உள்ள நிலத்திற்கும், சர்வே எண். 206/4 பில் உள்ள நிலத்திற்கும் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம் என்றும், அது போல நானும், 206/4 பி உள்ள 88 1/2 செண்ட் மற்றும் 61 செண்ட் நிலத்திற்கும் தண்ணீர் எடுத்துக்கொள்ளலம் என்றும் பேசி முடிவு செய்தது என்றால், ஆமாம்.

3. பூமிக்கடியில் செல்லும் பைப்லைனில் சேதம் ஏற்பட்டால் 48 மணிநேரத்திற்குள்ளாக சரி செய்துக்கொள்ளவேண்டும என்றால், ஆமாம். பஞ்சாயத்தார் முன்னிலையில் பேசி முடிவு

செய்யயப்பட்டது. இரண்டு பத்திரங்கள் ஏற்படுத்தப்பட்டு ஆளுக்கொரு பத்திரம் கொடுத்துள்ளார்கள் என்றால், ஆமாம். 18.09.2017 தேதியிட்ட பத்திரம் பி**.**வா**.**சா**.**ஆ**.1** – ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. தற்போது என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைப்படத்தில் கண்டுள்ளவாறுதான் பைப்லைன் பாதை கிணறு ஆகியவை அமைந்துள்ளது என்றால், 32 ½ செண்ட் வரை அமைந்துள்ள பைப்லைன் பற்றித் தான் எனக்கு தெரியும். அதற்குமேல் எங்கு செல்கிறது என்று எனக்கு தெரியாது. பொதுக்கிணற்றிலிருந்து புல எண். 207/5பி வரையிலும் பைப்லைன் வழியாக தண்ணீர் 28 வருடங்களாக எடுத்துச் செல்கிறேன் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சிய அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் சம்மந்த பத்திரம் உள்ள கையொப்பம் என்னுடையதுதானா என்றால், இல்லை.

5. என்னுடைய தாய்வழி தாத்தா நல்லுசாமிநாயக்கர் இறந்துவிட்டார் என்றால், ஆமாம். அவர்தான் புல எண். 207/5பி-ல் உள்ள சொத்தை அவர் வெங்கடாசலத்திற்கு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கிற்கு பின்னிட்டுதான் தெரிய வந்தது. எனக்கு நிலம் விற்ற கணேசன் என்ன உறவு என்றால், என்னுடைய தாத்தா வகையில் என் அண்ணன் முறை ஆகிறார். புல எண். 206/4சி-ல் உள்ள பொதுக்கிணற்றிலிருந்து உயில் சொத்தான 207/5பி-க்கு தென்மேற்கில் அவருக்கு வேறு நிலங்கள் இருக்கிறது என்றால், ஆமாம்.

6. அவரும், பொதுக்கிணற்றிலிருந்து அவருடைய நிலத்திற்கு தண்ணீர் எடுத்துச் சென்றார் என்றால், நிலமே அவவருடையதுதான். அவரும், அவருடைய காட்டிற்கும் பைப்லைன் மூலமாக தண்ணீர் எடுத்துச்சென்றார் என்றால், என்னிடம் சம்மந்தம வாங்கி எடுத்துச்சென்றார். அதேபோல 1-ம் பிரரதிவாதியும், புல எண். 207/5பி-ல் உள்ள கிணற்றிலிருந்து அவருடைய நிலத்திற்கு தண்ணீர் எடுத்துச் சென்றார் என்றால், இல்லை. 1-ம் பிரதிவாதி தண்ணீர் எடுத்துச் சென்றது உண்மை தான் என்றாலும, அதற்கு சம்மந்தம தெரிவித்துதான் சம்மந்தம் பத்திரம் ஏற்படத்தப்பட்டுள்ளது என்றாலும், நான் வழககிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும, சரியல்ல. என்னை ஆள் வைத்து அடித்து தான் தண்ணீர் எடுத்துச் செல்கிறார். நான் கூறுவது தவறு என்றாலும், என் சம்மந்ததின் பேரில்தான் தண்ணீர் எடுத்துச் செல்கிறார் என்றால், சரியல்ல. பொதுக்கிணற்றில் எனக்கும், வெங்கடாசலத்திற்கும் பொதுவில் பாதி உரிமை உள்ளது என்றால், ஆமாம். பொதுக்கிணறு அல்லாமல் என்னுடைய நிலத்தில் நான் ஆழ்துளை கிணறு அமைந்துள்ளேன் எனறால், ஆமாம். அதற்கு தனியாக மின் இணைப்பு உள்ளதா என்றால், இல்லை.

7. அந்த கிணற்றிலிருந்து என்னுடைய வீதத்தில் Change Over Switch – மூலமாக தண்ணீர்

எடுத்துக்கொள்ளுமாறு பஞ்சயாத்தார்கள் கூறினார்கள் என்றால், ஆமாம். பொதுக்கிணற்றில் என்னுடைய நிலங்களுக்கு என்னுடைய பாதிய பாத்தியத்தில் தண்ணீர் பாய்ச்சிறேன் என்றாலும், அவரும் அதேபோல் தண்ணீர் பாய்ச்சிகிறார் என்ாறல், சரியல்ல. அவருடைய 32 செண்ட் நிலத்திற்கு மட்டும்தான் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள வேண்டும். நான் 1.50 நிலத்திற்கும் மட்டும்தான் பாய்ச்சிக்கொள்ள வேண்டும். அதற்கு சம்மந்தப்பட்டு தான் இருவரும் வாங்கினோம். கணேசனிடம் நிலம் வாங்கும்போதே பிரதிவாதியின் இதர நிலங்களுக்கும் தண்ணீர் எடுத்துச் செல்லாலாம் என்று சொல்லிதான் கிரயம் வாங்கினோம் என்றாலும் வழககிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

8. பொதுக்கிணற்றிலிருந்து 1-ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட புல எண். 207/5-பில் உள்ள இதர நிலங்களுக்கு தண்ணீர் எடுத்துச் செல்ல எந்த உரிமை இல்லை என்றால், சரியல்ல. எனவே, நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றாலும், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

Ending Time: 11.50 A.M.

(ஒப்பம்/- N. திலகேஸ்வரி)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ.), ஆத்தூர்.